LIFESAVING SOCIETY®
*The Lifeguarding Experts*

ஒண்டாரியோ

அன்பார்ந்த பெற்றோர்களுக்கு / பாதுகாவலர்களுக்கு,

உங்கள் பிள்ளை பள்ளியில் உயிர்காக்கும் சங்கத்தின் ***ஸ்விம் டு சர்வைவ்® பிளஸ்*** திட்டத்தில் பங்கேற்றிருக்கிறது. *ஸ்விம் டு சர்வைவ்+* கிரேடு 3 ஸ்விம் டு சர்வைவ்® திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது, இது ஆழமான தண்ணீரில் எதிர்பாரத விதமாக விழும்போது தப்பிப் பிழைப்பதற்குத் தேவையான மூன்று அத்தியாவசியத் திறன்களின் மீது கவனம் செலுத்துகிறது:

தண்ணீருக்குள் ஆழமான இடத்தில் **பல்டியடித்தல்**, 1 நிமிடத்திற்கு தண்ணீரில் **நடத்தல்** மற்றும் 50 மீட்டர்களுக்கு **நீச்சலடித்தல்**.

*ஸ்விம் டு சர்வைவ்+* ஆனது நிஜ வாழ்க்கையில் நீர்நிலைச் சூழல்களில் தப்பிப் பிழைப்பதற்கும் ஒரு நண்பருக்குப் பாதுகாப்பாக உதவுவதற்கும் தேவைப்படுகின்ற திறன்களைக் கற்றுக்கொடுக்கிறது. இது, தண்ணீரில் அவர்கள் பாதுகாப்பாக இருக்க உதவுவதற்கு சிறப்பான முடிவெடுப்பதற்குத் துணைபுரிகிறது.

திட்டத்தில் 3 பாகங்கள் இருக்கின்றன,

1. ஆடை அணிந்திருக்கும்போது ஸ்விம் டு சர்வைவ் தரநிலையைச் செயல்படுத்துதல்
2. ஆழமான தண்ணீருக்குள் விழுந்துவிட்ட ஒரு நண்பர் ஆபத்தில் சிக்கிக்கொள்ளாமலிருக்க உதவுதல்
3. உடற்தகுதி நீச்சலை முடித்தல்

ஸ்விம் டு சர்வைவ்+ திட்டம் பள்ளி செயல்படும் நேரங்களின் போது தொடக்கப்பள்ளிப் பிள்ளைகளுக்கு நீச்சலுக்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்படுவதைக் குறைப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. பல பிள்ளைகளுக்கு எப்படி நீந்துவது எனக் கற்றுக்கொள்வதற்குக் கூட வாய்ப்புக் கிடைப்பதில்லை என்பதையும், தப்பிப்பிழைப்பதற்கான நீச்சல் பயிற்சி என்பது தண்ணீரில் பாதுகாப்பாக இருப்பதற்குத் தேவையான முக்கியமான ***முதல்*** படி என்பதையும் உயிர்காக்கும் சங்கம் அறிந்திருக்கிறது. எங்களுடைய திட்டங்களைப் பற்றி உங்களுக்குத் தெரியாவிட்டால் ***யூடியூபில் உள்ள எங்களுடைய ஸ்விம் டு சர்வைவ் வீடியோவைப்*** பார்க்குமாறு நான் உங்களை ஊக்குவிக்கிறேன்.

நீங்கள் அதை http://www.youtube.com/user/OntarioLifesaving என்ற வலைத்தள இணைப்பில் காணலாம். இந்த வீடியோ குறிப்பிட்ட கிரேடு 3 வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் ஸ்விம் டு சர்வைவ் திறன்களைக் கற்றுக்கொள்வதைக் காண்பிக்கிறது. இது 8 மொழிகளில் கிடைக்கிறது. ஸ்விம் டு சர்வைவ்+ இத்திட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது.

தயவுசெய்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அனுமதிப் படிவத்தில் கையொப்பமிடவும். குளத்துக்கு ஆடைகளைக் கொண்டுவருமாறு உங்கள் பிள்ளை கேட்டுக்கொள்ளப்படும். அவர்கள் கொண்டுவரும் ஆடை ஈரமாகலாம் என்பதை தயவுசெய்து தெரிந்துகொள்ளுங்கள். அவர்கள் ஒரு மேலாடையையும் (நீளமான கை கொண்ட ஆடை விரும்பத்தக்கது), கால்சட்டையையும் (லெக்கிங்ஸ், பைஜாமா பேண்ட்ஸ், ஸ்வெட் பேண்ட்ஸ் போன்றவை) கொண்டுவர வேண்டும்.

உங்களுக்குக் கூடுதலான தகவல்கள் தேவைப்பட்டாலோ அல்லது இந்த உயிர்காப்புப் பயிற்சித் திட்டம் பற்றி உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தாலோ, தயவுசெய்து 416-490-8844 என்ற எண்ணில் தயங்காமல் என்னை நேரடியாகத் தொடர்புகொள்ளுங்கள் அல்லது swimtosurvive@lifeguarding.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

தங்கள் உண்மையுள்ள,

பொதுக் கல்வி ஒருங்கிணைப்பாளர்

பதிவுபெற்ற அறக்கட்டளை எண் 10809 7270 R0001

400 Consumers Road
Toronto, Ontario M2J 1P8 Canada

**தொலைபேசி: 416-490-8844 தொலைநகல்: 416-490-8766**
**மின்னஞ்சல்: experts@lifeguarding.com**
**www.lifesavingsociety.com**